**செய்தி வெளியீடு எண்: 026** **நாள்: 05.01.2018**

# <u>கைத்தறி மற்றும் துணிநூல் துறை</u>

## <u>தேசிய கைத்தறி கண்காட்சி –2017–18</u>

## <u>செய்தி வெளியீடு</u>

புத்தாண்டு மற்றும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு சென்னை, வாலாஜா சாலையில் அமைந்துள்ள கலைவாணர் அரங்கத்தில் **28.12.2017** முதல் **11.01.2018** வரை **15** நாட்கள் நடைபெறும் கைத்தறி துணிகளின் தேசிய அளவிலான கைத்தறி கண்காட்சியினை **மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஓ.எஸ்.மணியன் அவர்களால் 28.12.2017 அன்று துவக்கி வைக்கப்பட்டது.** இவ்விழாவில் கைத்தறி,கைத்திறன்,துணிநூல் மற்றும் கதர் துறையின் அரசு முதன்மைச் செயலர் திரு.க.பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் திரு.ச.முனியநாதன்,இ.ஆ.ப., மற்றும் கோ.ஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர் திரு.தி.ந.வெங்கடேஷ், இ.ஆ.ப., ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

இக்கண்காட்சியில் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து 180–க்கும் மேற்பட்ட கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களும், பிற மாநில நெசவாளர் கூட்டுறவு சங்கங்களும் சேர்ந்து 58 அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், வாடிக்கையாளர்களின் கருத்தை கவரும் வகையில், நூல் முதல் நெசவு வரையிலான பணிகளை அனைவரும் அறியும் வகையிலான கருப்பொருளுடன் கூடிய காட்சிக்கூடம் (Theme Pavillion) அமைக்கப்பட்டுள்ளது.

இக்கண்காட்சியில் தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும், உலகப் புகழ்பெற்ற பாரம்பரியமிக்க காஞ்சிபுரம் பட்டுச் சேலைகள், கண்ணையும் கருத்தையும் கவரும் புகழ்பெற்ற விசிறி மடிப்பு திருபுவனம் பட்டு சேலைகள், நுண்ணிய வேலைப்பாடுகளுடன் கூடிய ஆரணி பட்டுச் சேலைகள், கலைநயமிக்க சேலம் பட்டுச்

சேலைகள், பட்டு வேட்டிகள், அங்கவஸ்திரங்கள், மற்றும் பளபளக்கும் கோவை, திருப்பூர் பகுதி மென்பட்டு இரகங்கள், கோவை, பரமக்குடி செட்டிநாடு, உறையூர், விளந்தை மற்றும் நெகமம் பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் பருத்தி சேலை இரகங்கள்,ஈரோடு, சென்னிமலை மற்றும் கரூர் பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் பெட்ஷீட், படுக்கை விரிப்புகள், வீட்டு உபயோக துணி இரகங்கள், பவானி ஜமுக்காளம் இரகங்கள், பூம்புகார் நிறுவனத்தின் கலைநயமிக்க கைவினை பொருட்கள் மற்றும் காதி பொருட்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

பிற மாநிலங்களில் பிரசித்தி பெற்ற இரகங்களான ஒடிசா கமுச்சா சேலைகள், பெங்கால் காட்டன் சேலைகள், மத்திய பிரதேச காக்ரா சோளிகள், ஆந்திரா மாநில மங்களகிரி மற்றும் போச்சம்பள்ளி சேலைகள், ஜார்கண்டு பகுதி டஸர் பட்டுச் சேலைகள்,குஜராத் மாநில கர் சோலா ஆடைகள், கேரளா வேட்டிகள் மற்றும் கல்லி செட் முண்டுகள் மற்றும் பிற பிரசித்தி பெற்ற இரகங்களும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இக்கண்காட்சியில் விற்பனை செய்யப்படும் பருத்தி துணி வகைகளுக்கு 30 விழுக்காடு தள்ளுபடி அதாவது அதிகபட்சமாக ரூ.150/– வரையிலும், பட்டு துணி வகைகளக்கு 30 விழுக்காடு தள்ளுபடி அதாவது அதிகபட்சமாக ரூ.300/– வரையிலும் வழங்கப்படுகிறது. மேலும், அனைத்து துணி இரகங்களும் சங்கங்களின் உற்பத்தி விலையிலேயே விற்பனை செய்யப்படுகிறது. இக்கண்காட்சியின் மூலம் ரூ. 2.00 கோடிக்கும் அதிகமான மதிப்பில் கைத்தறி ஜவுளிகள் இரகங்கள் விற்பனை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இக்கண்காட்சியில் நுகர்வோர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக, **ஜரிகை பரிசோதனை மையம்** மற்றும் கைத்தறி முத்திரை (Handloom Mark), பட்டு முத்திரை (Silk Mark), India Handloom Brand ஆகியவை குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கென விழிப்புணர்வு மையம் அமைக்கப்பட்டுள்ளன.

பராம்பரியமிக்க, தொன்மை வாய்ந்த கைத்தறி தொழிலினை பாதுகாக்கவும், கைத்தறி நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் ஏதுவாக இக்கண்காட்சியில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள கைத்தறி துணி இரகங்களை வாங்கி பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**